# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.589/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சங்கர் | த-பெ | சாத்தப்பன் |
| ஊர்: | : | பிளார். | | |
| வயது: | : | 57/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உணவகம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பிளாரில் வசித்து உணவகத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். வழக்கு சம்மந்தமாக எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. சம்பவ சமயத்தில் எதிரிகள் எனது மனைவியை எவ்வித கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்ட வில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, என்னையும் எதிரிகள் கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி அடித்து காயப்படுத்தவில்லை, கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் எதிரிகள் மீது இருந்த வெறுப்புனர்வு காரணமாக அவர்கள் மீது புகார் அளித்து விட்டேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸ் விசாரணையில் கடந்த 27.04.2014 அன்று இரவு 10.00 மணிக்கு தங்களுக்கு சொந்தமான உணவகத்தை மூடிவிட்டு வீட்டிற்கு தன்னுடைய மனைவியுடன் சென்று விட்டதாகவும், 28.04.2014 அன்று காலை 4.30 மணியளவில் தங்களது கடையை நபர்கள் சிலர் அத்துமீறி உள்ளே நுழைந்து கடையை உடைத்து அங்கியிருந்த சாமான்களை வெளியே எடுத்து போட்டு விட்டதாகவும், சம்பவம் தெரிந்து அங்கு சென்று தன்னுடைய மனைவியுடன் பார்த்த போது எதிரிகள் ஒன்று கூடி தன்னையும் தன்னுடைய மனைவியையும் கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி, தன்னுடைய மனைவியை கீழே தள்ளி விட்டதாகவும், எதிரிகள் இந்த சம்பவத்தில் கொலை

மிரட்டல் விடுத்தாகவும் போலீசார் விசாரணையில்சொல்லி விட்டு தற்போது எதிரிகள் தங்களுக்கு தெரிந்தவர்கள் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 17:26:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.